★ வெடிகுண்டா? வெங்காய வெடியா? ★

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (29—10—49) | வெளியூர் (30—10—49) | இதழ் 77

வெடி குண்டுக்கும் வெருளாத 'விராடபுத்திரராம்!'

நா காக்காமல் சொல்லிழுக்கப்பட்டுச் சோகாப்பதே சொந்தச் சரக்காம்!

கண்ணியமற்றவர்களின் சீன வெடி விளையாட்டு

"நேற்று (26—10—49) மாலையில் திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் நடைபெற்ற ஒரு மாபெரும் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பேசிக்கொண்டிருந்தபோது இரு பெரிய வெடி சப்தங்கள் திடீரென்று கிளம்பின. இச்சம்பவம் காரணமாகச் சமீபத்திலிருந்த மூவருக்குச் சொற்ப காயம் ஏற்பட்டது. அவர்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். வெடிச் சப்தம் கிளம்பிய இடத்திலிருந்து வெடிக்காத சில படாசுகள் கைப்பற்றப்பட்டன."

—தினமணி—

"காமராஜ நாடார் பேசிக்கொண்டு இருந்தபொழுது" கூட்டத்தில் இரண்டு பெரிய வெடிவிபத்துக்கள் நேர்ந்தன. இவற்றை பரிசீலனை செய்ததில், இரண்டு பலமான வெடிகள் எனத் தெரிய வந்தது. மற்றும் பல சிறு வெடிகளும் மைதானத்தில் எங்கும் பரவிக்கிடந்தன."

"ஒருவருக்கு முகத்தில் காயங்கள். மற்றொருவருக்கு முன்கையில் வெட்டுக்காயம். மூன்றாவது பேர்வழிக்கு ஊமைக்காயமும், அதிர்ச்சியுமேற்பட்டது. முகத்தில் காயமடைந்தவர் தலைமை ஆஸ்பத்திரியில் உள்ளே சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மற்றுமிருவரும் சிகிச்சை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்."

—சு. மித்திரன்—

"இரண்டு பலத்த வெடி சப்தங்கள் கேட்டன. அருகாமையிலிருந்த மூவருக்குச் சொற்ப காயமேற்பட்டது. இவர்கள் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர். வெடிவிபத்துக்கள் நடைபெற்ற இடத்தில் சில பட்டாசு வெடிகள் கிடந்தன. இவற்றை போலீசார் கைப்பற்றினர்."

—தினசரி—

"On Examination, the explosives were found to be powerful crackers."

"அதிக சக்திவாய்ந்த படாசுகள் என்று, ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டன."

—இந்து—

தமிழ்நாட்டு ராஷ்ட்ரபதி காமராஜரின் திருவிளையாடல் புராணத்திலே, இது ஒரு படலம். அவரின் திக் விஜயத்தில் இது ஒரு அத்தியாயம்.

"யாகாவாராயினும் நாகாக்க—காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பது வள்ளுவர் வாக்கு. இதற்குக், காமராஜர் நல்லதோர் எடுத்துக்காட்டு.

காந்தியார் கூறிய அகிம்சை, ஆயுதங்களைத் தொட மறுப்பதோடு மட்டும் முற்றுப்புள்ளி வைத்து விடக் கூடியதன்று. மேலும் விரிவுடையது என்று வியாக்கியானக் கர்த்தாக்கள் கூறிடக் கேட்டிருக்கிறோம். அதாவது, மனத்தாலும் நாவாலும் பலாத்காரத்தைத் தொடக்கூடாது என்பது காந்தியார் மேற்கொண்ட அகிம்சாதர்மமாகும். குருநாதரின், இந்த உயர்ந்தக் கோட்பாடு காமராஜரை மட்டுமல்ல அந்தக் கும்பலிலுள்ள அனைவரையுமே எந்தக் காலத்திலும் கட்டுப்படுத்தினது கிடையாது. காமராஜர், அகிம்சையை மறந்தேனும், மனத்தாலும் தீண்டினதில்லை; நாவாலும் நெருங்கினதில்லை; செயலால் தீண்டியிருக்கிறாரோ இல்லையோ நமக்குத் தெரியாது.

ஏகாதிபத்தியத்தையே எதிர்த்துப் போராடியதாகப் பகட்டம் பேசிப் பழகியுள்ள காமராஜர், நம்மைப் போன்ற சாதாரணமானவர்களைக் கண்டா, கண்ணியமாகப் பேச வேண்டுமென்று கருத்துள் கொள்ளப் போகிறார்? நாமோ நிராயுதபாணிகள்—அவரோ போலீஸ் படையை ஏவிடும் அதிகாரம்பெற்றுள்ள அமைச்சர்களை, படைத்துக் காத்து அழிக்கும் சங்காரமூர்த்தி!

அவருடைய திருச்சிக் கூட்டத்தில், யாரோ, சில கண்ணியமற்றவர்கள், பொதுவாழ்வின் புனிதம் தெரியாதவர்கள், பேச்சுரிமையின் சிறப்பை உணராதவர்கள், சு. மித்திரனின் கூற்றுப்படி, 'பெரிய வெடியை' வெடித்து விட்டார்களாம். நல்லறிஞர்கள் பலரும், அந்த அர்த்தமற்ற—அவசியமற்ற — விரும்பத் கூடாது கயமைத்தனத்தைக் கண்டித்தே தீருவார்கள் என்பதில் ஆட்சேபணையில்லை. நாமும் இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த ஆகஸ்டு சுயராஜ்ய நடவடிக்கையை எவரும் கையாளக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அகிம்சா போதனையைப் பெற காமராஜர் சேர்ந்துள்ள பயிற்சிக் கூடத்தில நமக்குப் பயிலும் வாய்ப்பு இல்லாத காரணத்தால், அந்த அக்கிரமத்தை அழுத்தமாகத் திருத்தமாகக் கண்டிக்கிறோம். இது மனிதப் பண்பின்பாற் பட்டதல்ல என்பது தான், நமது

பண்டிதரின் அஹிம்சா போதனையும் பட்டாபியின் போர் முரசும்!

போரைத் தவிர்க்கும் போதனை அங்கு! போர் தொடுக்கும் போதனை இங்கு!

அரசியல் தலைவரும், கட்சித் தலைவரும்

"சுதந்திரம் கொடாமலிருப்பது, வகுப்பு வேற்றுமை காட்டுவது, பொருளாதாரத் தேவை ஆகிய இவையே போர் மூளுவதற்குக் காரணமாக உள்ளவை. முக்கியமான இந்த மூன்று காரணங்களையும் நாம் விலக்கினோமானால் போர் மூளச்செய்யும் குறும்புத்தனத்தை விலக்கியவர்களாவோம்."

இது இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் அண்மையில் சிக்காகோவில் ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சின் சாரம். அதாவது அவர் ஒருநாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்குமிடையே போர் மூளாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறார். அதற்குரிய மூன்று காரணங்களையும் சுட்டிக்காட்டி, இவையே போர் மூளச் செய்யும் சக்திகள் என்றும் விளக்குகிறார்.

நேரு ஒரு அரசியல் தலைவர்; அரசியலுக்குப் பொறுப்புணர்ச்சி அவசியம். ஆகவே அந்தப் பொறுப்புணர்ச்சியோடு இங்ஙனம் பேசியுள்ளார் நேரு. இது தான் ஒரு அரசியல் தலைவரிடம் பொதுவாக மக்கள் எதிர்பார்க்கும் பண்பாடு. இத்தகைய பண்பாட்டுடன் கூடிய நேரு அவர்கள் மேனாட்டாருக்கு அரசியல் உபதேசம் செய்து கொண்டிருக்கும் அதே நேரத்தில்தான், இங்கு பட்டாபி சீதாராமையா அவர்கள் பாகிஸ்தானைப்பற்றிப் பேசியிருக்கிறார். பட்டாபியின் பரிபக்குவத்தைச் சற்று பாருங்கள்.

"பாகிஸ்தான் காஷ்மீர் விஷயத்தில் நடந்துகொள்ளும்முறையைப் பார்க்கும்போது இந்தியா-பாக்கிஸ்தான் கைகலப்பு ஏற்படுமென்று ஒரு ஐயம் தோன்றுகிறது. அப்படி ஏதாகிலும் சச்சரவு நேர்ந்தால் இந்தியாவில் வாழும் 4 கோடி முஸ்லிம்களும் பாரதத்தின் பிரஜைகளாக இந்தியகொடியின் கீழ் திரண்டு சர்க்காருக்குத்தங்கள் முழு ஆதரவையும் தரவேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

முன்னவர் பேச்சு 'போருக்கு வித்திடாதே' என்று போதனை செய்கிறது. பின்னவர் பேச்சு 'போருக்குச் சித்தமாயிருங்கள்' என்று போர் முரசு கொட்டுகிறது. முன்னர் அந்த காந்திய போதனை செய்கிறார். பின்னவர் இந்த அதே போதனையைத் தகர்த்தெறிகிறார். போர் மூளுவதற்கான அடிப்படைக் காரணங்களுள் ஒன்று போரை மூளச் செய்யும் குறும்புத்தனம் (The power of Mischief to to make war) என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார் நேரு. ஆனால் அதே குறும்புத்தனத்தைச் செய்து காட்டுகிறார் பட்டாபி! அதுவும் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்; தேசிய படக்காட்சிசாலையில் அஹிம்சாமூர்த்தி அண்ணல் காந்தியாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்கும் போது! திறந்து வைப்பது அஹிம்சாமூர்த்தியின் படம்; அங்ஙனம் திறந்துவைத்துவிட்டு திருவாய் மலர்ந்தருளுவது 'போருக்குத் தயாராகுங்கள்' என்ற போதனை!

இங்ஙனம் இங்கும் அங்குமாக இரு தலைவர்கள் செய்யும் போதனையைக் கேட்கும்போது உண்மையிலேயே நமக்கு வேதனைதான் பிறக்கிறது. ஏன் இந்த பொருத்தமற்ற மனோநிலை? இங்ஙனம் தலைவர்கள் ஒருவருக்கொருவர் பொருத்தமற்ற விதத்தில் பேசித் திரிவார்களேயானால் மக்கள் எங்ஙனம் அறிவுத்துறையிலே தெளிவுபெறக்கூடும்? பத்திரிகையில் ஒரு பக்கத்திலே பண்டிதரின் அரசியல் அறிவுரையும் மற்றொரு பக்கத்தில் பட்டாபியின் பதட்டமான பேச்சும் காணப்பட்டால் இதனைப் பார்க்கும் வெளி நாட்டவர் நம்மைப்பற்றி என்ன நினைப்பர்?

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், அரசியல் தலைவர்களின் போக்கு வேறு, கட்சித் தலைவர்களின் போக்கு வேறு என்பதுதான். நேரு அரசியல் தலைவர்; பட்டாபி கட்சித் தலைவர். நேருவின் பேச்சில் அரசியலுக்கு வேண்டிய பொறுப்புணர்ச்சி காணப்படுகிறது. பட்டாபியின் பேச்சில் கட்சி வெறி காணப்படுகிறது. இதுதான் ஒரு அரசியல் தலைவருக்கும் ஒரு கட்சித் தலைவருக்கும் உள்ள வேற்றுமை.

சண்டனத்துக்குள்ள மூலகாரணம். நிறக,

காயப்பட்ட மூவரில், ஒருவருக்கு முகத்தில் காயமென்றும், மற்றொருவருக்கு கையில் வெட்டு காயமென்றும், வீசப்பட்டது படாஸ்தான் என்பதை வெளியிடாமலே, சுதேசமித்திரன் நிருபர் சத்திய சோதனை செய்கிறார். வெட்டுக் காயம் கூடவாமே ஒருவருக்கு முழங்கையில்! வெட்டு காயம் சிறு படாசிலே வெட்டுக கத்தியும் கூட வைத்துச் செய்திருக்கிறார்களே விற்பன்னர்கள்! நிருப நண்பரே, நாட்டுக்கு நல்லது செய்ய மனமில்லையாயினும், தீங்கிழைக்காமலாவது இரும்! நண்பரே!

வெடிசப்தம் கேட்ட இடத்தில்இருந்த மூவருக்கு சொற்ப காயங்கள் பட்டதாகவும் அங்குச் சோதித்துப் பார்த்ததில வெடிக்காத படாசுகள்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

சுயாட்சி!

"சென்னை கல்வி மந்திரி தோழர் மாதவமேனன் தன் சுற்றுப்பிரயாணத்தின்போது, திடீரென்று ஒரு தாலுக்கா ஆபீசுக்கு விஜயம் செய்தார். இவர்தான் மந்திரி மாதவமேனன் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. தாலுக்கா ஆபீசிற்குள் மந்திரி நுழைந்தபோது, அங்கிருந்த குமாஸ்தாக்கள் எல்லோரும் மேஜையின்மீது காலைத் தூக்கிப் போட்டு உல்லாசமாக வெற்றிலைக் குதப்பிக்கொண்டும், அவசரமாகத் தகவல் கேட்க வந்த கிராமவாசிகளை விரட்டியடித்துக் கொண்டும் இருந்தனர்."

மாலை மணி

சென்னை 29—10—49 சனிக்கிழமை

பாங்கி முறிகிறது

'நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஸ்டாலிங் கடனைத் திரும்பித்தருவதின் அளவைக் குறைக்கத் தான் வேண்டி இருக்கிறது' என்று இங்கிலாந்தில் நிதி மந்திரி கிரிப்ஸ் இரண்டு நாளைக்கு முன் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பேசியுள்ளார் 'இத்துணைக் கண்டத்திற்குப்பிரிட்டனிடமிருந்துசேர வேண்டிய ஸ்டர்லிங் கடன்தான் பெருந் தொகையாகும்.' குறைப்பது'என்பதில்,உறுதி'இல்லையானாலும், 'குறைத்தால் நல்லது' என்ற மனக் குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது கிரிப்சுக்கு, இந்தக் 'குறைப்புப்' பேச்சுக்கு இத்துணைக் கண்டத்தில் கிளம்புகிற எதிர்ப்பைக் கண்டு தான், கிரிப்ஸ், இத்துறையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

இப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிற அளவின் படியேட இனியும் ஸ்டர்லிங்கடனை திரும்பிக் கொடுத்து வருவது முடியாத காரியம் என்ற நினைப்பை, கிரிப்ஸ் கொள்வதற்கான காரணமென்ன என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டியது மிகமிக முக்கியமானதாகும். ஒரு பாங்கியில் பணம் போட்டிருக்கிறப் பலரும் ஒரே காலத்தில் கிட்டிப்போட்டு, பணத்தைத் திரும்ப வாங்க முயற்சிப்பார்களானல் பாங்கி முறிவதைத் தவிர்த்து வேறு முடிவு ஏற்படாது. போட்ட பணத்திற்கேற்ப சராசரி ஆளுக்குக் கொஞ்சமாகத்தான்கிடைக்கும். எனவே கிட்டிப்போட்டு வாங்கும் முறையால் போட்டப் பணம் புண்ணில்லாமல் கிடைத்துவிடாது.

அட்லியின் இங்கிலாந்து, முறிந்துபோகும் கட்டத்தை நெருங்கியுள்ள பாங்கி போல் இருக்கிறது. ஆதலால்தான்தனது ஸ்டர்லிங் மதிப்பையும் குறைத்துக்கொண்டு, சிக்கனம் செய்வதென்னும் பெயரில் 28 கோடி பவுனையும் செலவில் குறைத்துக்கொண்டு, டாலர்களுக்கு ஏற்றுமதியைப் பெருக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது இங்கிலாந்து. இனி என்றும் இங்கிலாந்து தனது பழைய வளப்பமான நிலைக்குத் திரும்பமுடியாது. அங்கு தொழில் திறம் இருக்கலாம், அரசியல் மேதைகள் இருக்கலாம், மக்களாட்சி வளம் இருக்கலாம், இவ்வளவு இருந்தும், ஒரு சிறந்த நாட்டிற்கு இருக்க வேண்டிய இயற்கை வளம் இங்கிலாந்திற்கு அறவே கிடையாது. எனவே தனது மக்களின் உயிர் வாழ்விற்கு உணவுப் பொருளையும், உடைக்கு பிறநாட்டுப் பஞ்சையும் என்றென்றைக்கும் எதிர் பார்த்து வாழக்கூடிய நிர்பந்தமான நிலை இங்கிலாந்திற்கு இயற்கையில் அமைந்துபோயிருக்கிறது. இந்த இயற்கைத் தடையை மீறுவது என்பது இலகுவாக முடியக்கூடிய காரியமன்று. அனைத்து உலகமும் சமதர்மத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால்தான், இங்கிலாந்து மக்களுக்கு வாழ்வு கிடைப்பது நிரந்தரமாக இருக்கமுடியும்.

கடந்த போருக்குப் பின்னர் இதற்கான அரியதோர் வாய்ப்பு இங்கிலாந்துக்கு இருந்தது. இங்கிலாந்தின் பூர்வ வாசனை, சென்ற கால டாம்பிகம்,தானுகக்கிடைத்த வாய்ப்பைத் தட்டிக் கழிக்கச் செய்விட்டது. கூட வேண்டிய இடத்தைக் கோபித்துக்கொண்டது.சேரக்கூடாதஇடத்தில்நேசம் பாராட்டி, உதவி கிடைக்குமென்று எதிர்பார்த்து, சமுத்துவமாகப் பழகத் தொடங்கி சரணுகதிக் கட்டத்தை அடைந்து, கூப்பிட்ட இடத்திற்கு விரைந்தோடி பணிவோடு நின்று, காலங்கழிக்க வேண்டிய சங்கடத்தில் இங்கிலாந்தில் சிக்கிக் கொண்டது. இன்று திக்குமுக்காடுகிறது. நிமிஷத்திற்கு நிமிஷம் அதன் பொருளாதாரம் நொறுங்கிக் கொண்டு வருகிறது. அன்று இங்கிலாந்து அறிந்தோ அறியாமலோ செய்துவிட்டத் தவறுக்கு, இன்று அந்நாடு செல்வச் சிறப்பிழந்துவருகிறது. இந்தப் பொருளாதாரச் சருக்குமரம் இங்கிலாந்தை எங்கு கொண்டுபோய் விடுமோ, யார் கண்டார்கள்?

இங்கிலாந்துக்கு இருக்கும் இந்த நெருக்கடியானச் சூழ்நிலை நிலையில், இத்துணைக் கண்டத்துக்குச் சேரவேண்டிய ஸ்டர்லிங் கடன் தொகையை, ஒரு செப்புக் காசு அளவும் தள்ளிக்கொடுக்காமல் திரும்பப் பெறுவதற்கான புது வழி வகைகளைக் காண வேண்டும். தேசீயத்தீவிரம் பேசி விடுவதால் மட்டும் இது சாத்தியமாகிவிடக் கூடியதன்று. இந்த ஸ்டர்லிங் சேமிப்பினுல் வங்கத்தில் முப்பது லட்சம் மக்கள் பலியாகினர்என்று பரிதாபப் குரலில் பாடுவதால் மட்டும் நிறைவேறி விடாது. இங்கிலாந்திற்கும் இத்துணைக் கண்டத்திற்கும் புதிதாக ஏற்பட்டுள்ள நட்பு முறை நாசமாகி விடுமே என்று நாவசைப்பதாலும் ஸ்டர்லிங் கடன் வசூலாகி விடாது.

நமது ஸ்டர்லிங் சேமிப்பில் இதுவரையில் பாதிக்குக் குறையாமல் கரைந்துபோயிருக்கிறதாம். வெகு வேகமாகக் கரைந்து கொண்டு வருகிறது என்று சில நாளைக்கு முன் இருதொழில் தலைவர்கள் எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். இதில். நாட்டின் நலத்திற்கு எந்த அளவு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது சிதம்பர ரகசியமாகவே இருக்கிறது.

முப்பது லட்சம் மக்கள் பட்டினியால் இறந்து சேர்த்ததுதான் இந்த ஸ்டர்லிங் சொத்து என்று கூறுவதில் நாணயம் இருக்குமானுல், ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாக, இன்னும் இந்த நாட்டில் இருக்கிற தொழிற்சாலைகளையும், தோட்டக் காடுகளையும், இந்திய சர்க்கார். நியாயமான விலை வேசி எடுத்துக்கொண்டு, தேசத்தின் சொத்தாக்க வேண்டும். முதலாளிகளின் லாப வேட்டைக்கு, போனது போக, இனியாவது மீதமுள்ள ஸ்டர்லிங் சொத்து, சத்திரத்து தண்டச் சோருகக் கூடாது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், செல்வத்தைப்பெருக்குவதுந்தான் இந்திய சர்க்காரின் பொருளாதார நோக்கம் என்று பறைசாற்றுவதில் துளி உண்மை இருக்குமானலும், இங்குள்ள பிரிட்டிஷ் முதலாளிகளின் சொத்தை உடனடியாகப் பறிமுதல் செய்வது போன்ற, தீவிரமாக, தக்கநடவடிக்கை எடுத்துக் கொள்ள முனையட்டும். இதை புறக்கணித்துவிட்டு. பிரிட்டிஷ் முதலாளிகளுடன் பம்பாய் பண முட்டைகள் கூடிக்கொண்டு கூட்டுக் கொள்ளை நடத்த. ஸ்டர்லிங் தொகை பயன் படுத்தப் படுமானல், ஸ்டர்லிங் தொகை வசூலாவதும் ஒன்றுதான், பிரிட்டிஷார் தம் வாயில்போட்டுக்கொள்வதும் ஒன்றுதான். முப்பது லட்சம் மக்கள் உயிரைக் கொடுத்து ஸ்டர்லிங் தொகை மிச்சம் பிடித்ததை, அவர்கள் பரம்பரைக்கு, வாழ்வளிப்பதற்குப் பயன் படுத்துவது தான் பொறுப்புள்ள சர்க்காரின் நீகாக் கடமையாகும். இந்த நாட்டுப் பண முட்டைகள் இந்த நிதிக்காக ஒன்றும் தியாகம் செய்து கெட்டுப்போக வில்லை என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டு, ஸ்டர்லிங் நிதியை வசூலிக்க இந்திய சர்க்கார் இன்றே முன் வர வேண்டுகிறோம்.

கிளைக் கழகத் தோழர்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நகர்களிலும், சிற்றூர்களிலும் கிளைக் கழகம் அமைத்தலும், பல கிளைக் கழகங்களையும் ஒன்று சேர்த்து அந்தந்த மாவட்டங்களில் மாவட்டக் கழகங்கள் அமைத்தலும் இருக்க வேண்டுமென்று திட்டமிடப் பட்டிருக்கிறது.

ஆகவே தாலுக்காக் கிளைக் கழகம் என்று ஒன்று நிறுவ வேண்டிய அவசியமில்லை. கிளைக் கழகம்—அதற்கு மேலே மாவடடக் கழகம்—அதற்கு மேலே மாநிலக் கழகம் அல்லது தலைமைக் கழகம், இந்த முறையில் நின்றுதான் தி. மு. க. (கர்காலிக) பணியாற்ற வேண்டும்.

தாலுக்காக்கழகங்கள்எங்கும்-எல்லா மாவட்டங்களிலும் சரியாக அமைய ஏதுவில்லாததால், அத்தகைய அமைப்பு அவசியமில்லை என்று கருதப் பட்டுள்ளது.

தாலுக்காக் கிளைக்கழகம் நிறுவும் முயற்சியைக் கைவிட்டு விடும்படியாக, ஆங்காங்குள்ள ஒன்றிரண்டு தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு கிளைக்கழகமும் இரண்டு. இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மாவட்டக் கழகத்திற்கு அனுப்பவேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுதான் மாவட்டக்கழகம் அமையவேண்டும்.

என். வி நடராசன்,
செயலாளர்—அமைப்புக்குழு.
தி. மு. க.- தலைமை நிலையம்

உலைக்கூடம்

['சம்மட்டி']

சுப்ரமணிய சம்மாரம்!

எவ்வளவு காலம் கெட்டுவிட்டது பார்த்தீர்களா? சூர சம்மாரம் நரகா சூரவதம். இராவண சம்மாரம் என்பனவற்றைத்தான் நாம் இதுவரையில் கேட்டு வந்திருக்கிறோம்! இப்போது என்னடான்னு சுப்ரமணியனையே சம்மாரம் செய்துட்டதா பத்திரிகையிலே செய்திவருது! என்ன அக்கிரமம் பாருங்க!

"நம்ம காங்கிரஸ் சர்க்காரோ ஆஸ்தீகாளாலே நடத்தப்படற சர்க்கார். அவாளுக்குள்ள தெய்வப் பிரீதியோ சம்சயத்துக்கே இடமில்லாதது. இவ்வளவு இருந்தும் பலன் ஒண்ணுமே காணமே சார்! இவா ஆட்சியிலேயே சுப்ரமணியரையே சம்மாரம் செய்து விடுவதா இருந்தால் அந்த நாஸ்திகா தப்பித்தவறி ஆட்சிக்கி வந்துட்டா. 'கந்தா' கடம்பா' 'குகா' 'குறவள்ளி கோலாகலா' என்றெல்லாம், அப்பன் முருகனுடைய நாமாவளியையே நாமெல்லாம் உச்சரிக்கக் கூடாதுண்ணு நம்ம நாக்குகளையெல்லாம் துண்டித்து விடுவாளே. சார்! எமகாதகா ஆச்சே சார், அவாள்ளாம்!"

"நாமெல்லாம் கோயில்லே வெச்சி கும்பிடறமே சார், முருகனெ சிலையாக்கி. அதெ அவா கிண்டல் செய்றவாளாச்சே, சார்! கோடிக் கணக்கிலே குழந்தைகள் பாலில்லாமே சாகிறபோது கற் சிலைக்கு ஏண்டா கொடம் கொடமா பாலெக் கொட்ற, கல்லுளிமங்கன்களா என்று கேலி பேசறவளாச்சே, சார். அவா! சிலையா இருக்கிற சுப்ரமணியன். எதிலெயிடறி விழுந்துடுவாருண்ணு விளக்கேத்தற, அதிலும் காராம் பசு. நெய் விளக்குப் போடறண்ணு நையாண்டிபண்ணறபசங்களாச்சே, சார், அவா!"

"கோயிலைக் கட்டி அழாதே, ஏழைக் கொழந்தைகளெ கவனிங்க; நம்போன்ற மக்களுக்கு உதவி செய்யுங்க, திருமூலர்கூட சொல்லியிருக்கார் நாமெல்லாம் 'நடமாடும் கோயில்' என்று, ஆதாரம் காட்டிப் பேசுற வெல்வாயன்களாச்சே சார், அவனுங்க! விடமாட்டான்களே சார், சும்மா நம்மை யெல்லாம், அவனுங்கக் கையிலே அதிகார மட்டும் கெடச்சுட்டா!"

"இப்ப நம்ம, ஆஸ்திக சர்க்கார், செய்திருக்கிற சுப்ரமணிய சம்மாரத்தை வேறெ ஆதாரம் காட்டி, சுப்ரமணியரையே பட்டினி போட்டுக் கொன்றுவிடுவான்களே சார், அந்தப் பொடியனுங்க! சர்க்கார் தான் ஏதோ தவறுதலாக நடந்து கொண்டாலும். எப்படி சார், நம்ம குகப் பெருமான் அதற்குப் பணிந்து விடுவது? சட்டம் கிட்ட நெருங்கிற போதே, வஜ்ஜிராயுதத்தெ விட்டு, சர்க்கார் தலையையே திருகி எறிந்திருக்கவேண்டாமா, சார்? என்னமோ. தமக்கு வந்த ஆபத்தைக் கூட நிவர்த்தித்துக் கொள்ள அக்கரை இல்லாமெ, அந்தக் குறப் பொண்ணோடு கொஞ்சி கிட்டு இருக்கலாமா சார், இந்தச் சரவணபவன்? நான் தான் கேட்கிறேன்! தெய்வானை என்ன தேவலோகத்துக்காப் போயிடுவாண்ண. இந்தக் கார்த்திகேயன், அவ சேலையெப் பிடித்துக் கிட்டுச் சதா திரிஞ்சிகிட்டு இருக்கிறதே விட்டுட்டா? எல்லாம் நம்ம தெய்வங்க யோக்கியதையும், அந்த நாக்குப் புழுத்தவனுங்க கேலி செய்யருப்போலத்தான் இருக்குது! கலிகாலம் சார் கலிகாலம்!"

'என்னையா காலையிலே பாதித் தூக்கத்திலே இருக்கிறபொழுதே. ஒப்பாரி வைக்க வந்துட்டே? நரி ஊளையிடற மாதிரியா, என் தலை மாட்டிலெ வந்து அழுதுத் தொலைக்கிறே? வேறு எங்கையாவது வீடு பார்த்துக்கொண்டு குடியேறி விட்டாத்தான், உன் உபத்திரவமில்லாமெ நான் நிம்மதியா இருக்க முடியுமய்யா!............

ஐயா! மகாநுபாவரே! என்னையா சங்கதி? இப்படி அழுது வடியிறயெ? சொல்லித் தொலையுமையா தெரலையும்!"

"என்னப்பா இப்படிக் கோபப்படற! எளங்கண்ணு பயமறியாது என்பார்களே. அதுபோல இல்லவோப்பா கோபிக்கிறே!"

"ஐயோ! சங்கதியச் சொல்லறயா! சண்டைக்கு நிற்கிறயா! எதுக்கு வந்தயோ அதெச் சொல்லியழுவையா....யழுவு!"

'நம்ம காஞ்சீபுரத்துக்கு அடுத்த அய்யம் பேட்டையிலே சூரசம்மாரம் நடத்தக் கூடாதுண்ணு, சர்க்கார் 144 போட்டு தடுத்துட்டாங்களாம். போன வருஷத்திலே. நடந்த சூர சம்மாரத்தும் போது, அங்கு இரண்டு கட்சி ஏற்பட்டு சண்டை போட்டுக் கொண்டதிலே உயிர்ச் சேதம்கூட ஏற்பட்டதாம். அந்த மாதிரி இந்த வருஷமும் நேரக் கூடாதுண்ணு முன் ஜாக்கிர்தையா சர்க்கார் தடுத்துட்டதாம். இப்படித் திருவிழாவிற்குத் தடை விதித்து சூர சம்மாரத்தை நிறுத்துட்டா சுப்ரமணியர் கதி என்னுகிறது தம்பி!"

"சுப்ரமணிய சம்மாரம்!" "வேண்டாந் தம்பி வேண்டாம்! நாக்குப் புழுத்துடும்!"

"நீதான் சொல்லு! சர்க்கார் 144 போட்டுது. சுப்ரமணியர் வெளியிலே கிளம்பலே! என்ன இதுக்கு அருத்தம்! 'சுப்ரமணியர் சம்மாரம்' என்று தானே சொல்லுவாங்க விஷயம் தெரிஞ்சவங்க!

"நீயும் அந்தப் பசங்க கும்பல்லே ஒரு ஆள் போல இருக்குது! இப்படிண்ணு மொதல்லயே தெரிஞ்சிருந்தா குடியிருக்க வீடே விட்டிருக்க மாட்டந்தம்பி! மரியாதையா, விட்டே காலி செய்துட்டுப்போ தம்பி!"

' ஐயா! போதுமய்யா 'சுப்ரமணிய சம்மாரம்!' உங்களுக்கு ஒரு கும்பிடுங்க! போயிட்டு வாங்கையா போயிட்டு வாங்க!"

அந்தப் பையன் பெயரும் சுப்ரமணியன்!

உலக சமாதானம்

(0)

உலக சமாதான காங்கிரஸ் கூட்டம் ஒன்றைக் கூட்டப் போவதாகச் சமீபத்தில் உலக சமாதான காங்கிரஸ் செயலகத்திலிருந்து ஒரு செய்தி கிடைத்திருப்பதாகவும். இதன்படி அக். 29, 30 தேதிகளில் ரோமில் இச் சமாதான மாநாடு நடைபெறும் என்றும் தெரிகிறது. உலக சமாதான காங்கிரசில் பங்கு கொண்டுள்ள பிரிட்டிஷ் கமிட்டியார் ஜே. டி. பெர்னல் என்பவர் தலைமையில் 100 உறுப்பினர் இம்மகாநாட்டிற்குச் செல்வார்களாம். முன்னரே 30 நாடுகள் இம்மகாநாட்டில் பங்கு கொள்ளச் சென்றுள்ளன. இந்தச் சமாதானப் பிரியர்களாலாவது உலகில் சமாதானம் நிலவட்டும்.

இடுக்கித் தாகக இரண்டு கழகமும் பயன்படலாம்

ஒப்பற்றத் தலைவர்களுக்கெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தோம் எமது தலைவரை!

——(o)——

திருவண்ணாமலையில் சண்முகம்—சிற்றரசு—மதியழகன்

திருவண்ணாமலை, அக. 24— நேறறு மாலை 6 மணிககு திருவண்ணாமலை சினனக கடைத் தெருவில் அமைந்துள்ள பரந்த இடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, நகரசபைத் தலைவர் ப. உ. சணமுகம அவர்கள் தலைமையில், மிக விமரிசையாக நடைபெற்றது கூட்ட ஆரம்பத்தில திராவிடப்பண் பாடப்பட்டது ஏராளமான வாலிபர்களும், மாணவர்களும், பொது மக்களும் கூடியிருந்தனர்.

ப. உ. சண்முகம்

தலைமை தாங்கிய நகரசபைத் தலைவர் ப. உ. சண்முகம அவர்கள் முன்னுரையில கூறியதாவது:-"திராவிட முன்னேறறக கழகம இனறு ஆரமபமாகிறது. நேற்றுவரை திராவிடர் கழகததில பணியாறறியவர்கள நாம. அபபடிபபட்ட நாம் இபபொழுது இநத நிலையை மேறகொணடுளளோம, கொளகையின மேல உள்ளப் பற்றின காரணமாக. நாம யாருககும விரோதியல்ல. நேறறுவரை பெரியாரை மரியாதைப படுததியவர்கள், அவர் அன்புககுப பாததிரமானவர்கள். திராவிட கழகததை ஒழிககக கிளமபியவர்கள் எனறு ஆதரவாளாகள் சநதேகிக்க வேணடியதிலலை. அநத கொள்கைகளின மேலுள்ள அககறைதான திராவிட முன்னேறறக கழகமாய நமமை உருவாககியிருககிறது. இரணடு கடசியாகிவிடடது. எனவே ஒழிநதுவிடுவார்கள் என்று, எதிரிகள எககளிததால நிசசயம ஏமாறறமடைவார்கள். இரு முகாமின நோககமும ஒனறு. எப்படி இடலரை ஒழிகக, ரஷ்யபபோர் முனையிலே போர நடநத நேரததிலேயே பிரஞ்சு நாடடுபபககமும நேச நாடுகள் போமுனை அமைத்து போராடினரோ அபபடிப பட்ட நிலையில, நாம இருககிறோம். இரணடுமுகாமகளின நோககமும் பொது. இதை தெளிவாக உணர வேணடும. தோழா அணணா அவர்கள குறிபபிடடது போல நாம இரடடைககுழல துபபாககி" எனறு கூறிமுடிததா, பின சி. பி. சிறறரசு அவர்களைப பேசுமாறு அழைததார.

சி. பி. சிற்றரசு

தோழர் சி, பி, சிற்றரசு பேசியதாவது:-"ஒருவகையில் பெரியாரின திருமண ஏறபாட்டின் ஆரமப அததியாயம இஙகேதான் நடநதது. இஙகுதான கவரனா-ஜெனரல ராஜகோபாலாசசாரியிடம தமது அறபுதமான ஏறபாடடைப பறறி ஆலோசனை கேடடார. ஆசசாரியாா இஙகுப பேசுகையில குறிபபிட்டார, சுயமரியாதைககாராகளைக கணடு எனக்கு அச்சம இல்லை என்று. அதை நிரூபிப்பது போல் அமைந்துவிடடது. நமது தலைவரின் தகாத திருமணம். நாமெல்லாம வெட்கித் தலைகுனியும் நிலையை, வேதனை அடையும நிலையை ஏற்படுததிவிடடது. கொஞ்ச நாட்களுக்கு முன்பே பெரியார் இது பற்றி, நான் செய்து கொள்ளப் போகும் ஏற்பாடு எங்கு இயக்கம் அழிந்துவிடுமோ, கொள்கைகள் செத்துவிடுமோ என்று சநதேகிக்கும வகையில, எதிரிகள கேலி செய்யும அளவில இருக்கும் என்று குறிப்பிட்டுளளார். இதற்குத்தான் அவ்வளவு பெரிய பீடிகை என்று இபபொழுதுதான் தெரிகிறது. பெரியார் தனக்குப் பின்னும் கொள்கை அழியாதிருககத் திருமணம் என்றால், அவருடைய கொளகை என்ன வலிவற்றது என்று கருதுகிருரா? ஏன் அவருக்குச் சநதேகம் வரவேண்டும். 1300 ஆண்டுகளுக்கு முன் தோனறிய முகமதுநபியின கொள்கை அழிககப்படமுடியவிலலை 2000 ஆண்டுகளுக்கு முன் தோனறிய கிருததுவின் கொள்கை அழிக்கபபட முடியவில்லை அதறகு முன்பு தோன்றிய புத்தனின் கொள்கை அழிககப்பட முடியவில்லை. கனபூஷியசின் கொளகை அழிக்கபபட முடியவிலலை. அப்படியிருகக, பெரியாரின் கொள்கை அழிந்துவிடும என்பதில் எபபடி அர்த்தமிருக்கமுடியும்" என்று கூறி விளக்கமாகப் பேசினர்.

சி. பி. சிற்றரசு பேசுகையில் கூட்டததில குழபபம செயய முயற்சித்த பெரியார் ஆதரவாளர் என்பதாகக் கூறபபடும் ஒருவரைப் பொது மக்கள் கூடடத்திலிருந்து அப்புறப்படுத்தினர்கள். பின்னர் சுயமரியாதைக கருத்துக்களைப பற்றியும, சர்க்கார் அடக்குமுறை புற்றியும் பேசினர்.

கே ஏ. மதியழகன்

கடைசியாகத் தோழர் கே. ஏ. மதியழகன பேசினா. அவர் பேசசில குறிப்பிடடதாவது:—

"திராவிட முன்னேற்றக்கழகததின துவகக விழா இனறு நடைபெறுகிறது. இந்தச் சூழ்நிலை உருவாகுவதறகு வித்திட்ட சமபவம கூட இந்த ஊரிலே தான நடைபெறறது. பாதாளலிங்கக குகையைத திறநது வைககச்சென்ற 5 திஙகளுககு முன ராஜகோபாலாச்சாரியாா இஙகு வந்தாா. பாதாளலிங்க குகையை மடடும் திறந்து வைககவில்லை. பகுததறிவுத தநதையையும சநதிததுப பேசினா. ஆனல அவரது சநதிபபு பகுததறிவுத தநதையைப பாதாளததில அமிழ்ததுவதாய முடிநதுவிடடதே, என்பது தான் நமது வருத்தம். ஆச்சாரியார் சுயமரியாதை இயக்கம். கடவுள் லீலைகளிலே ஒன்று என்று அன்று குறிப்பிட்டார். ஆச்சாரியார் சூட்சம புத்திக்காரர். நமது தலைவர் செய்யப் போகும் "லீலை"யைக் குறித்துத்தான் அப்படிக் கூறினரோ என்ற சந்தேகம் நமக்கு வருகிறது.

எப்படியோ நாம் புதிய பாதையை மேற்கொள்ள வேண்டியவர்களாக ஆனேம். இதற்குக் காரணம், பெரியார் மீது நமக்கு மரியாதை இல்லாததால் அல்ல. கொள்கையின் மீது பற்று இல்லாததால் அல்ல. பெரியாருக்கு நாம் கொடுத்த மரியாதை, எந்தத் தலைவருக்கும் கொடுத்ததில்லை. நம்முடைய சந்ததிக்கு மட்டுமல்ல, பல சந்ததிக்கும் அவரே தலைவர் என்று எண்ணி இறுமாந்திருந்தவர்கள் நாம் அவர் கொள்கையை கட்டளையை நிறைவேற்றுவதறகாக குடும்பங்களைத் துறந்திருக்கிறோம். நண்பர்களைப் பகைத்திருக்கிறோம் தாய்மார்களின் கண்ணீருக்குக் கூட அஞ்சாமல் இருந்திருக்கிறோம். கண்கள் குருடாக்கப் பட்டிருக்கிறோம். கால் கைகள் ஒடிக்கப் பட்டிருக்கிறோம். மண்டைகள் உடைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய இரத்தத்தை அபிஷேகித்திருக்கிறோம தடியடிகள் தந்தத் தழும்புகளைப் பெற்றிருக்கிறோம. சிறைச்சாலைகளை நிரப்பியிருககிறோம், சொந்தவாழ்வு; சுகம, சொத்து ஆகியவைகளை இழந்திருக்கிறோம். உற்றார், உறவினர், ஊர்பெரியவர் இவர்களை விரோதித்திருக்கிறோம் இவ்வளவு மடடும்தானா? வேறு நாட்டு மாவீரர், அறிஞர், புரட்சிக்காரர்கள் ஆகியோரைப் படிக்கிறநேரத்தில, இந்நாட்டின் இழிவு போக்க வந்த ஈடில்லாத தலைவர் இவரே என்று எண்ணி எங்கள் இருதயத்திலே பூரிப்பு கொணடிருககிறோம்.

கிரேக்க நாட்டிலே, ஏன், எதற்கு என்று கேள் என்ற விசாரணையறிவை ஏதன்ஸ் நகர மக்களுக்குக் கொடுத்ததறகாக, நஞ்சுககோப்பை அளிக்கப்பட்ட சாக்ரடீஸ் எங்கள் ஞாபகத்திற்கு வரும்போதெலலாம,கிராம மக்களுக்குக் கடவுள் ஆபாசங்களைக கண்டித்துக் கூறிப் பகுததறிவைத் தூண்டிய பெரியாரே ஞாபகத்திற்கு வந்தார்.

இதாலிய நாட்டிலே கொண்ட கொள்கைக்காக, குவலயமே எதிர்ப்பினும் உணமையையே உரைப்பேன் என்று கூறி, அதற்காக ரோமாபுரியில தீககுண்டத்திலே வெந்து சாமபலான புருனேவை நினைக்குமபோதெல லாம், ஊராருக்கு உண்மையை உபதேசம் செய்யும் பெரியாரே எங்கள் முன் நின்ருர்.

பிரஞ்சு நாட்டிலே சீமானகள், சிங்காரிகள், புனனகையிலே மகிழ்நது, மடாதிபதிகள் தநத மதமெனும மதுரசம உணடு, ஆனநத வாழ்வு நடததிய அகரமததிறகு எதிராக, பஞசை, பராரிகளின நலவாழ்வுககாக தனது பேனுமுனையைப பயன படுததிய வால்டயரை நினைக்கும போதெலலாம, கோயில மாடாதிபதிகள, அவாகள நஞசை, புஞசை, ஐசுவரியம ஆகியவறறைக கணடிககும பெரியாரின் எழுத்தோவியமே எஙகள் முன் நினறது.

நீக்ரோக்கள் அடிமையை ஆபரகாம லிஙகன ஒழிததான எனறு எணணுமபோது, பழங்குடி மக்களின இழிவு ஒழிகக வநத பாதுகாவலா என எணணினேம.

பாட்டாளிகளின்கோட்டை சோவியத் நாடடு லெனினின உழைபபை நினைக்கிற நேரததில. அவனது உழைபபே உருவாகி வநத உருவம பெரியார் என நினைததவர்கள் நாஙகள.

சீனுவின் பழமையை மாய்ததவன சனயாடசென என்னும போது, திராவிடததின வைதிகததை ஒழிகக வநத வீரா இவா எனறு போறறியவாகள.

துருக்கியிலே கமால், பெண் அடிமை போககினன எனறு கருதும போதெலலாம, பெணணின அடிமை விலஙகை உடைகக வநதப பெரியாா எனபபெருமை படடிருக்கிறோம. பெண்ணடிமையைப பறறி, தாய்க்குலததின பெருமையைப பறறி, திருமண முறை பற்றி அவா அளிததுள்ள உரை ஏராளம். அபபடிபபடடவா தனது கொளகையே வழுவினா என்ற போது நம்மால சகிகக முடியவிலலை.

தாலமுத்து—நடராசன் பிணஙகள பெரியாரின செய்கையைப் பார்த்தால் சிரிக்காதா! இதறகாகவா எஙகள் உயிர்க காணிககை எனறு! வாழ்வெலலாம சுழலெனச சுற்றி சுயமரியாதைப பிரசாரம செயது, எலுமபாகி, வறுமையில் மடிந்த அஞ்சா நெஞ்சன் அழகிரியின் கல்லறை என்ன கேட்கும இந்தச் செயலைப் பார்த்து! ஆகவேதான், நாம் புதுபபாதை அமைக்க வேண்டியவர்களானேம், கொள்கையைக் காபபோம், கொள்கை வழி நடப்போம." என்று கூறி; நேருவின் அமெரிக்கப் பயணம, சர்ககார் அடக்குமுறை, நமது கடமை முதலியவைப பறறிப பேசினர்.

பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூடடம முடிநதது. செயலாளர் தாமலிஙகம, ப.உ. கணணன ஆகியோர் முயற்சி பாராடடத தகுந்தது. (ந.நி.)

இரா. நெடுஞ்செழியன்

ஈ. வெ. கி. சம்பத்

23—10—49ல் நடைபெற்ற திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகிய இருவரும். பேசும்பொருட்டு, மேடையில் தோன்றியபோது, எடுக்கப்பட்ட நிழற்படங்களே, மேலே காட்டப்பட்டிருப்பனவாகும். இவை "திருவாரூர் கிருஷ்ணா போட்டோ ஸ்டுடியோ"வால் எடுக்கப்பட்டவையாகும். அவர்களுக்கு எம் நன்றி!

வேறு புகலிடம்?

" அரசியல் குற்றங்களுக்காக அல்லாமல், கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு முதலிய குற்றங்களுக்காக தண்டனை அடைந்தவர்கள் காங்கிரஸ் கமிட்டிகளின் அங்கத்தினர்களாக இருக்கமுடியாதென்று தடைவிதிக்கப்பட வேண்டும்."

— எஸ். குற்றாலலிங்கம் பிள்ளை.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர், மாலைமணி

இந்தோனேஷியாவின் இன்னல் தீருமா?

புது அரசியல் புது வாழ்வைத் தரவேண்டும்

காலனி ஆட்சி முறை மூலம் மேற்கத்திய நாடுகள் பல ஆசியாவின் வளம் பொருந்திய பல நாடுகளைத் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டு அவற்றின் வளத்தை யெல்லாம் சுரண்டி வருகின்றன. எனினும் சுரண்டப்படும் இத்தகைய நாடுகள் கடந்த சில ஆண்டுகளாகத் தமது விடுதலைக்காக விடாது போரிட்டு வருகின்றன. அவற்றுள் இந்தோனேஷியாவும் ஒன்று. இந்தோனேஷியா பல்வளம் நிரம்பிய நாடு. இந்நாட்டை டச்சு அரசியலார் படுத்திய பாடு சொல்லத்தரமல்ல. விடுதலை வேட்கை கொண்டு போரிட முனைந்த மக்களை யெல்லாம் பீரங்கிக்கும் துப்பாக்கிக்கும் இரையாக்கினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதற்குப் பக்கத்துணையாக நின்று உதவிற்று. ஜப்பானிய ஆக்ரமிப்பிலிருந்து விடுபட்ட மக்களை டச்சு சர்வாதிகாரம் மீண்டும் படுகுழியில் ஆழ்த்திற்று. எனினும் இந்தோனேஷியரின் விடுதலைப் போராட்டம் நின்றபாடில்லை. இது கண்டு டச்சு அரசியலார் ஏதேதோ திட்டங்களைத் தீட்டிக்காட்டி அவ்வப்போது நிலைமையைச் சமாளித்து வந்தனர். அப்படி அவர்கள் தீட்டிய திட்டங்களெல்லாம் மேலும் டச்சு ஆதிக்கம் இந்தோனேஷியாவில் நிலைக்க வைப்பதாகவே யிருந்தன. ஆனால் இந்தோனேஷிய குடியரசினர் தமக்குப் பூரண விடுதலை ஏற்படாதவரை போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை யென உறுதியாகக் கூறிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து குடியரசினருக்கும் டச்சு அரசியலாருக்குமிடையே பேச்சு வார்த்தைப் படலம் ஆரம்பமாயிற்று. டச்சு சர்க்கார் குடியரசினருக்குப் புது அரசியல் அமைத்துத் தருவதாக ஆசை காட்டினர். ஆனால் அதே நேரத்தில் டச்சு கையாட்களையும் இந்தோனேஷிய பிற்போக்குவாதிகளையும் அந்த அரசியலில் இடம்பெறச் செய்து அதன் மூலம் தமது பிடி இந்தோனேஷியாவில் என்றும் நிலைத்திருக்கச் சதி செய்தனர். ஆனால் இந்தச் சதியும் நாளடைவில் சரியலாயிற்று. கலப்பற்ற சுதந்தரத்தைத் தவிர வேறொன்றையும் நாங்கள் ஏற்கமாட்டோம் என்றனர் குடியரசினர். இதன் விளைவாக சமரசப் படலம் ஆரம்பமாயிற்று. அந்த சமரசப் படலத்தின் கடைசி கட்டம் தான் ஹேக் மகாநாடு.

அண்மையில் ஹேக்கில் இந்தோனேஷியக் குடியரசின் பிரதிநிதிகளும் டச்சுப் பிரதிநிதிகளும் கூடி வட்டமேஜை மாநாடொன்றைக் கூட்டினர். அந்தமாநாட்டின் விளைவாக தற்போது இந்தோனேஷிய அரசியலில் சுதந்திர ஒளி தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

கூட்டு ஆட்சி முறையில் இந்தோனேஷிய அரசியலை அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் புது அரசியல் டிசம்பர் மாதம் 20-ம் தேதி முதல் ஆரம்பமாகுமாம். அங்ஙனம் அமைக்கப்படப் போகும் கூட்டு ஆட்சியில் பல்வேறு ஆட்சி மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் இருப்பார். பாராளும மன்றத்துக்கு ஒரு முதலமைச்சரும் அவருக்குக் கீழ் வேறு சில அமைச்சர்களும் இருந்து பாராளும் மன்றத்தின் பணிகளைக் கவனித்து வருவர். தலைவரால் நியமிக்கப்படும் ஒரு உயர் ஆலோசனைக் குழுவும் பணியாற்றும். இக் குழுவின் உறுப்பினர் பாராளும்மன்றத் தலைவராலேயே தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதுதான் புது அரசியல் அமைப்பு முறை.

இப்புது அரசியலை இந்தோனேஷியா மக்கள் செம்மையாக நடத்தி புது வாழ்வு வாழச் செய்வதே டச்சு அரசியலார்கடன். இனியும் இந்தோனேஷியாவில் தமது ஆதிக்கம் இருக்கவேண்டும் எனக் கருதி மீண்டும் இந்தோனேஷியரை இன்னலுக்குள்ளாக்காமல் ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து, கண்ணியமான முறையில் டச்சு சர்க்கார் வெளியேறவேண்டும். இல்லையேல் மீண்டும் இந்தோனேஷியாவில் போராட்டம் மூளக் கூடும். இதனை இந்தோனேஷிய மந்திரி தோழர் ஷம்சுதீன் சமீபத்தில் ஹேக்கிலிருந்து பட்டேவியாவுக்குத் திரும்புகையில் கெய்ரோவில் நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதாவது, "இந்த டிசம்பருக்குள் டச்சுக்காரர்கள் இந்தோனேஷியரிடம் அதிகாரத்தை ஒப்படைக்காவிட்டால் அவர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்துவிடுவார்கள்". என்று பேசியிருக்கிறார்.

இனி நடப்பவை

பொள்ளாச்சி— நகர திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்கவிழாப் பொதுக் கூட்டம், 6—11—49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். அதுபோது, பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் துவக்க விழாச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

* * *

தஞ்சாவூர்:—திராவிட முன்னேற்றக் கழகம்—நகரக் கிளையின் சார்பாக மாபெரும் பொதுக் கூட்டம் தஞ்சை திலகர் திடலில், 30—10—49 மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஆற்காடு:— 5—11—49 சனிக்கிழமை யன்று, திராவிட மாணவர் கழகத்தைக் கலைத்துவிட்டு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்க எண்ணியிருப்பதால், திராவிட மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென, மாணவர் கழக அமைப்பாளர் ஆ. மணிஎழிலன் அழைக்கிறார்.

* * *

விருகம்பாக்கம்:— விருகம்பாக்கம் திராவிட முன்னேற்ற இளைஞர் படிப்பகத்தின் ஆதரவில், 30—10—49 ஞாயிறு மாலை விருகம்பாக்கம் "ஜண்டா" அருகில் ஒரு பொதுக்கூட்டம், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர் மதியழகன் பி. ஏ. அவர்கள் பேசுவார்கள்.

* * *

எக்கலாஸ்புரம் (வ-ஆ)—இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 23—10—49ல் நடைபெறுததால், மீண்டும் 30-10-49 ஞாயிறு மாலை 7-மணிக்கு வடக்கப்பட்டு வி. என். தத்தப்பன் அவர்கள் தலைமையில் அமைப்புக்கூட்டமும், கழகத் திறப்பு விழாவும், கொடியேற்றலும் நடைபெறும்.

* * *

வடக்கப்பட்டு—இவ்வூர் தி. மு. கழக அமைப்புக்கூட்டமும், திறப்பு விழாவும், கொடியேற்றலும் 30-10-49 ஞாயிறு மாலை 5 மணிக்குத் தோழர் வி. என். தத்தப்பன் தலைமையில் நடைபெறும்.

* * *

சென்னை—தோழர்கள் பழனிசாமி—பச்சையம்மாள் திருமணம் 30-10-49 காலை 9 மணிக்கு சென்னை வண்ணையம்பதி பேரம் பாலு செட்டித்தெரு 77ம் எண் இல்லத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் காஞ்சி, கல்யாணசுந்தரம், என். ஜீவரத்தினம் ஆகியோர் பேசுவார்கள்.

வெடிகுண்டா?...

[1 பக்கத் தொடர்ச்சி]

கிடந்ததாகவும் 'தினமணி' நிருபர் அறிவிக்கிறார்.

இதுபோன்றே 'தினசரி'யும் செய்தியைக் கொடுக்கிறது.

'பலத்தப் படாசுகள்' என்று 'ஹிந்து' நிருபர் அறிவித்திருக்கிறார்.

வெடித்தது படாசுகள்தான் என்பது கூட்டத்தில் மற்றக் கட்சிகள் மீது வழக்கம்போல நிந்தனை நிகண்டு படித்த காமராஜர் அறிந்து கொள்ளாமல் இருக்க நியாயமில்லை. உண்மையை அறிந்து கொண்ட பின்னரும், ஏகாதிபத்தியத்தோடு போரிட்டதாம, வெடிகளுக்கா பயப்படுவேன்! என்று விராடபுத்திர வீரம் பேசுகிறார். இந்த ஆணவ நோய் அவருக்கு இருப்பது அவசியந்தானா?

காமராஜரும் அவர் சகாக்களும நாகாக்காமல் பேசித் திரியும் பேச்சின் விளைவு தானே, இந்த விரும்பத்தகாத விபரீத நிகழ்ச்சிகள் எல்லாம். இப்படிப் பேசிவிடுவதினால், இந்த அக்கிரமத்தை நாட்டை விட்டு விரட்டிவிட முடியுமா? நயமான வார்த்தைகளின் முனையில் அல்லவோ, நாட்டின் நல்ல நிலை பிணைக்கப்பட்டிருக்கிறது. வீண் பெருமை பேசுவது விபரீதத்தை வளர்ப்பதாகத்தானே முடியும்?

பிறந்த வீட்டின் பெருமையை உடன் பிறந்தாரிடமேவா கூறுவது? வெள்ளையர்கள், இந்த வீரப் பிரதாபத்தை உணர்ந்தாலாவது, காமராஜரைக் கண்டதும் கைகால் நடுக்கம் கொள்ளுவார்கள்! சுய காரியத்துக்காக கண்ணே, மணியே என்று கொஞ்சுவார்கள்!

நமக்கென்ன இவர் புதியவரா? இவருடைய வீரத்தையும், பரந்த அரசியல் அறிவையும், நாவின் திறத்தையும், மதுரமொழியையும் அறியாதவர்களா என்ன தமிழ்நாட்டு மக்கள்? ஏனோ இப்படி, தமிழர்களுக்குக் காது குடைச்சல் ஏற்படுகிற அளவிற்குச் சுய புராணம் படிப்பதில ஈடுபடுகிறார் தினம தினம?

வேண்டாம் நண்பரே, விட்டு விடுங்கள் இந்த வீண் டம்பப்பேச்சை! அதிகாரம் ஒரு மாயாமோகினி! வாக்காளர் ஆதரவு என்னும் கட்டுக் குலைந்தால், அந்த மாயா மோகினி, பிறருடைய பாதவருடியாகப் போய்விடுவாள் நண்பரே! அது சமயம் அழுதாலும் அலறினாலும், உம்மைத் திரும்பியும் பார்க்க மாட்டாள் அந்த மாயவதி!

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

கல்வார்ப்பட்டி—சிற்றூர்க்கிளை

கல்வார்ப்பட்டி, அக். 21—

"திராவிட முன்னேற்றக் கழகம்—கல்வார்ப்பட்டி—சிற்றூர்க் கிளை"யின் அமைப்புக் கூட்டம 28—9—49ம் நாளன்று அர்ச்சுனன் சதுக்கத்தில் ரங்கமலை நதியில் நடைபெற்றது. கழகத்திற்குச் செயற்குழு ஒன்றும் நிறுவப்பட்டது.

செயலாளர்:— வெங்கடாசலம்; விளம்பர அமைச்சர் — வீரக்கோமான். மற்றும்பல செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

உத்தமபாளையம்—சிற்றூர்க் கிளை

உத்தமபாளையம், அக். 22—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் பி. நல்லுசாமி அவர்கள் தலைமையில் 16—10—49ல் தோழர் எஸ். எஸ். அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

அதுபோது, "தி. மு. க— உத்தமபாளையம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு புதிய செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். செய்யது முகமது; துணைச்செயலாளர்:— பி. நல்லுசாமி; நிதி உறுப்பினர்-எச். எஸ். ஹமீது; விளம்பர உறுப்பினர்கள்—இரண்யன், பி. கண்ணன். ஏனைய செயலுறுப்பினர்கள்:—எஸ் பாட்சா, எஸ். தங்கமணி, ஏ. செல்லையா, ஈ. வி. ராமசாமி. (வி-உ)

* * *

இலங்கை—மாவட்டக்கிளை

கொழும்பு, அக். 20—

இலங்கை திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழுவின் கூட்டம் 16—10—49 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புறக்கோட்டை—கொசுக் கடை திராவிடர் கழகப் பணிமனையில் நடைபெற்றது.

மத்திய நிர்வாக உறுப்பினர்கள் (இந்தியா சென்றவர்கள் தவிர) பெரும்பான்மையினர் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். கூட்டத்திற்கு வர இயலாமைக்கு வருந்தியும், நிகழ்ச்சி நிரலிலுள்ள மூன்று தீர்மானங்களையும் ஆதரிப்பதாகவும், தோழர்கள் ஏ. எம். துரைசாமி, எஸ். கே. சிங்காரம், பி.எம். மாணிக்கம், ஏ. இளஞ்செழியன் ஆகியோர் தங்களது கருத்தைக் கடிதம் மூலம் தெரிவித்திருந்தனர்.

கழகத் துணைத் தலைவர் தோழர் எஸ். கே. சுந்தரராசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். முதலில் கழகத்திற்கு வந்து சேர்ந்த கடிதங்கள் வாசிக்கப்பட்டு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் ஏற்கனவே முன் அறிக்கை செய்திருந்த தீர்மானங்கள் மூன்றும், தோழர் மா. இளஞ்சேரனால் ஒன்றன்பின் ஒன்றாக முன்மொழியப்பட்டு, விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பெரியார் தலைமையில் நம்பிக்கையில்லை என்று தெரிவித்து ஒரு தீர்மானமும், 17-9-49ல் சென்னையில் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தை ஆமோதிப்பதாகக் கூறி மற்றொரு தீர்மானமும், இலங்கை திராவிடர் கழகத்தை, "இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றி அமைப்பது என்பதாக வேறோர் தீர்மானமும் ஆக மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் நடைபெற்றக் கட்டிடத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஏராளமான கழகத் தோழர்கள் கூடி நின்று நிர்வாகக் கூட்டத்தின் முடிவைத் தெரிந்துகொள்ள அமைதியுடன் காத்திருந்தனர். கூட்டத்தின் முடிவைத் துணைத் தலைவர் அறிவித்ததும், செயலாளரின் நன்றியிலலுடன் 8-30 மணிக்குக் கூட்டம இனிது முடிவுற்றது. (செ-ர்)

* * *

பெரியார் இராமசாமி நகர் (பெங்களூர்)— நகரக் கிளை

பெரியார் இராமசாமிநகர், அக். 22-

21—10—49ல் பெங்களூர் பெரியார் இராமசாமி நகர் திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் மாலை 4 மணிக்கு அமைப்புக் குழுத் தலைவர் தோழர் எம். சி. வேணுகோபால் அவர்கள் தலைமையில் தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடந்தேறியது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—பெ. ம. அப்பாதுரை; துணைச்செயலாளர்— சி. முனுசாமி, பொருள் உறுப்பினர்:-எஸ். சுப்பிரமணி; விளம்பர உறுப்பினர்கள்— பெ. ம. துரைசாமி, மு. சி. வேணு. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்— பி. முனுசாமி, ஆர். இராகவன், கே. கே. சுந்தரரம, எம். தம்பா, பி. கே. பெருமாள், டி. பொன்னுரங்கம், கே. பி. நல்லதம்பி, கே. கே. இளஞ்சேரன்.

கழக நிர்வாகக் குழுவும், செயற்குழுவும் நிர்வாகச் செயலாளரின் தலைமையின்கீழ் இயங்கத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் பெ. ம. அப்பாதுரை முடிவுரை கூறக் கூட்டம் மாலை 6½ மணிக்கு முடிவுற்றது. (செ-ர்)

* * *

மாப்பிள்ளையூரணி— சிற்றூர்க்கிளை

மாப்பிள்ளையூரணி, அக். 23—

இவ்வூரில் 21-10-49 அன்று மாலை 4-மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் கூடி, புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—எஸ். காத்தமுத்து; துணைச் செயலாளர்— த. சித்திரவேல்; விளம்பர உறுப்பினர்—எஸ். வி. பாண்டியன்; பொருள் உறுப்பினர்—த. காசி. ஏனைய செயலுறுப்பினர்கள்— ப. முத்தையா (கழக முக்கியஸ்தர்), ரா. தங்கமணி, சு. நாராயணன், சு. செந்தூரான், க. தங்கையா, ச. சன்னியாசி, எம். முனுசாமி, எம். ஆர். செல்வம்.

பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது. (வி-உ)

திராவிட முன்னேற்றக் கழகம்

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

260

இனவழி திராவிடர்கள் அனைவரும் ஒன்று

மலையாளப் பகுதியில் முன்னேற்றக் கழகத் துவக்க விழா

கோவிந்தன் இளம்வழுதி கலந்துகொண்டனர்

பாலராமபுரம், அக். 25—

இவ்வூர் தி. மு. கழக துவக்க விழா 22—10—49 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நேதாஜி மைதானத்தில் வைத்து துவக்கப்பட்டது. கூட்டத்திற்கு மலையாள தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். தி. மு. கழக தோழர் அ. சுப்பிரமணியன் அவர்கள் முன் மொழிய கழகச் செயலாளர் தோழர் ஆ. அருணாசலம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தலைவர் முன்னுரைக்குப்பின், திருவத்திபுரம் புலவர் கே. கோவிந்தன B. O. L. அவர்கள் தி. மு. கழகத்தின் திட்டங்களைக்குறித்து பேசினதாவது:-"திராவிட மொழிகளாகிய தமிழ், மலையாளம், கன்னடம் இவையின் அத்தனையும் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் பேச்சு வழக்கில் இருந்த தமிழ் மொழியுடன் ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம் புகுந்து மாறினவையாகும். ஆகையால் தமிழில் பேசினால், மலையாளத் தோழர்களுக்கு எளிதில் புரிந்துகொள்ள முடியுமென்றும், எடுத்துக்காட்டாக, மலையாளத்தில் மேற்கு திசையைக் குறிப்பிடும்போது படிஞாயிறு என்று சொல்வது தனித்தமிழ் மொழியாகத்தான் இருக்கிறது. தமிழ் நாட்டில் பகலவன் உதயமாகும் கிழக்கு திசை தாழ்ந்து இருக்கிறது. (மேற்கு திசையில்) சூரியன் மறைகிறது. மேடாக இருப்பதால் மேற்கு என்றும்; ஆனால் மலையாள நாட்டில் கிழக்குப் பக்கம் உயரமாகவும் மலைகளைக் கொண்டு நிரம்பியும், மேற்கு பாகம் தாழ்ந்தும் இருப்பதாலும், பகலவனை, ஞாயிறு என்று அழைக்கும் ஒரு சொல் இருக்கிறது. மறைவதை படிவது என்று கூறும் ஒரு சொல்லும், சூரியன் மறையும் திசையே படிஞாயிறு என்று சொல்வது தனித் தமிழ் சொல்லாகும். திராவிடர்கள் என்றால், தமிழும், தெலுங்கும்; மலையாளியும், கன்னடமும் பேசும் மக்கள் ஆவார்கள்" என்று நகைச்சுவையுடன் சுமார் 1 மணி நேரம் பேசினார்.

அடுத்தபடியாக குறிஞ்சிப்பாடி தோழர் இரா. இளமவழுதி பேசினார். திராவிட நாடு தனியாகப் பிரிந்தால், மொழிவழியாக மாகாணங்கள் அமைத்து கூட்டாட்சி முறையில் ஆட்சி நிர்வாகம் இருக்குமென்றும் ஆகையால் இந்நாட்டுப் பொருளைச்சுரண்டி வாழும் வட நாட்டானுக்கு ஆதரவு கொடுப்பதை எதிர்த்து பிரசாரம் செய்யும் கட்சிதான் எங்கள் கட்சி. ஆனாலும், இந்நாட்டு முதலாளிகள் ஏழை திராவிடனை சுரண்டி வாழ்வதை இக் கழகம் ஆதரிக்கவில்லை என்றும், பல இடங்களிலும் எதிர்த்துப் போராடியுள்ளன என்றும், திராவிடநாடு தனிநாடானால், வட நாட்டு முதலாளிகள் எடுத்துச் சென்ற பொருளைத் திருப்பி வாங்க வாங்க முடியாது என்றும், இந்நாட்டு முதலாளிகள் சுரண்டுவதை திராவிடர் தனியாட்சியில் திருப்பி வாங்க முடியும் என்றும், இன உணர்ச்சியும், அரசியல் ஞானமும், நாட்டுப்பற்றும் இந் நாட்டு பெருங்குடி மக்கள் ஆகிய திராவிடர்கள் இடத்தில் ஏற்பட பிரசாரம் செய்யும் கட்சிதான் எங்கள் கழகம் என்றும், கடவுள் துவேஷிகள் நாங்கள் என்பதைக் குறித்து பேசினபோது, மனிதனில், மனிதன் பேதம் காணும் முறை, உயர்வு தாழ்வு குலத்துக்கொரு நீதி இவைகள்தான் கடவுள் கொள்கை என்றால் அதை நாங்கள் எதிர்க்கிறோமே அல்லாமல்; மனித சமூகம் உயர்வதையும், அன்பு நெறி பரவுவதையும்; சகோதரத் தன்மை நிலை நிறுத்தப் படுவதையும், மனிதன் ஒழுக்கமுடன், மனிதத் தன்மையுடன் வாழ்வதை ஒப்புக் கொள்ளும் ஒரு கடவுளைத்தான் நாங்கள் வரவேற்கிறோம் என்றும், அரசியல் சூழ் நிலையைக் குறித்து பேசும்போது வறுமை மிகுந்த நாடு நம் நாடு என்றும் முதலமைச்சர் நேரு குபேர நாட்டுக்குச் செல்கிறார், என்றும் இந்தியாவின் தூதுவர்களுக்கு இலட்சக் கணக்கான ரூபாயில் வெளிநாடுகளில் தங்குவதற்கு மாளிகை, ஆயிரக் கணக்கான ரூபாய்கள் சம்பளம், இங்கு வறுமை மிகுந்த நாட்டில், முறையா, வாக்குரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை இவை பறிக்கப்படுகின்றன, சுதந்திர இந்தியாவில் என்றும், மக்கள் உரிமை பறித்து. மக்கள் தலைவர்களைச் சிறையில் அடைக்கிறது காங்கிரஸ் என்றும், இதுதான் ஜனநாயகமா என்றும், மேலும் தென்னாட்டுப்பழங்குடி மக்களாகிய திராவிட மக்கள் நம நாட்டில் வாழ வசதி இல்லாமல், வெளி நாடுகளுக்குக்கூலிகளாகச்செல்லுகின்றனர் என்றும், மலையாள நாட்டுத் திராவிடனும் செல்லுகிறான் என்றும், அதே பொழுது, வடநாட்டு அகதிகளுக்குத் தென்னாட்டிலே வாழ்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கின்றது சென்னை அரசாங்கம் என்றும், நாட்டிலே தொழில் இல்லாமல் மக்கள், பசி, பட்டினியுடன் வாழ்கின்றனர்; கொச்சி, திருவாங்கூர் ராஜ பிரமுகருக்குப் பல இலட்சக்கணக்கில் மாதச் சம்பளமா? என்றும், ஒரு பக்கம் பசி மற்றொரு பக்கம் ஜீரணம் இல்லாமை.

இது இன்றைய நாட்டு நடப்பு என்றும், கட்சியின் சமூக சீர்திருத்தத் திட்டத்தைக்குறித்தும், மொழி வழியாக நாம் பிரிந்து இருந்தாலும் இன அடிப்படையில் நாம யாவரும திராவிடர்கள்தான என்றும் தெளிவாக எடுத்துப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 9-மணிக்குக் கலைந்தது. கூட்டத்திற்கு ஏராளமான மலையாளத் தோழர்கள் வந்து முடிவு வரைக்கும் பொறுமையுடன் இருந்து கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. (வி. உ.)

நம்மை யாரும் ஒழிக்க முடியாது

நாடு பிரியும் வரை நமது கழகம் இருக்கும்

மதுரை கூடலூரில் ஆசைத்தம்பி

கூடலூர் (மதுரை), அக். 25—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா இவ்வட்டார பிரமுகர் தோழர் வி. பரமன் தலைமையில இன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 3000-க்கு மேற்பட்ட மக்கள் தழுமி இருந்தனர். கமபம், புதுப்பட்டி ஆகிய இடங்களில் இருந்தெல்லாம் இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர். கமபம் தோழர் நடராசன் நாட்டுப்பண்பாட கூட்டம் ஆரம்பமாகியது. தோழர் எஸ். ராமசாமி முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றுவித்தார். தலைவர் தோழர் பரமன் திராவிடர் கழகம, முன்னேற்றக் கழகமாக மாறியதை விவரித்துக் கூறினார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பின் தோழர் ஏ. வி. பி ஆசைத்தமபி உணர்ச்சியோடு பேசியதாவது :— "தலைவா அவர்களே! பெரியோர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தனியாக ஆரம்பிக்காமல், திராவிடர் கழகத்திலேயே நாங்கள் இருந்திருந்தால் நீங்கள் எங்களைக் கொள்கைப் பற்றுடையவர்களாக நம்பமாட்டீர்கள். அல்லது எங்களை நம்பாதிருக்கும்படி நம எதிரிகள் சூழ்ச்சி செய்திருப்பார்கள். எபபடி என்று கேட்பீர்கள்.

சொல்லும் செயலும்

காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்லி உங்களிடத்திலே ஓட்டு கேட்டார்கள்? நாங்கள் பதவிக்கு வந்தால் பஞ்சம் இருக்காது; வரி இருக்காது; வறுமை இருக்காது; மஞ்சள் பெட்டி நிறைந்தால மங்களம் பொங்கும்; இப்படி எல்லாம சொன்னார்களே. நடந்தது என்ன? வேலையில்லாத் திண்டாட்டம், வரி அதிகரிப்பு, அரிசிப் பஞ்சம். விலைவாசி உயர்வு ஆகியவைகளைத்தானே நீங்கள் கண்டீர்கள். சொன்ன சொற்படி காங்கிரஸ்காரர்கள் நடக்கவில்லை என்பதை இப்போது நீங்கள் உணர்ந்துவிட்டீர்கள். இனி அவர்களை நம்புவீர்களா? இனி ஓட்டு கேட்டால் போடுவீர்களா? நிச்சயமாகப் போடமாட்டீர்கள், நம்பிக்கை இழந்துவிட்டதால். யாராக இருந்தாலும செய்ய முடிந்தால் சொல்ல வேண்டும். சொல்லிவிட்டால், அதன்படி அவசியம் நடந்தே ஆகவேண்டும். மற்றப்படியானால நீங்கள் மதிக்கமாட்டீர்கள்; நம்பமாட்டீர்கள். அதேபோல தான் பல ஆண்டுகளாகப் பெரியார் என்ன சொல்லி வந்தாரோ, அதனபடி இன்று நடக்கவில்லை. அதற்காகவே பிரிந்தோம். இன்று நீங்கள் எங்களை நம்புகிறீர்கள். உங்களைக் காண்கிறேன், பெருங் கூட்டமாக.

பிறப்பிலே ஏற்றத் தாழ்வு ஏன்?

இப்பெயர் மாற்றத்தால் நம இலட்சியம் மாறிவிடவில்லை. நம்மை பலர், பலவழிகளிலும் ஒழிக்க முயல்கிறார்கள். ஆனால் நம்மை எவராலும் ஒழிக்க முடியாது. நாடு பிரியும்வரை நமது கழகம் இருந்தே தீரும். அறிவை ஆதாரமாகக் கொண்டே நாம் ஒவ்வொன்றையும் பேசி வருகிறோம். நாமும் வைதிக வகுப்பினரான பிராமணர்களும மனிதர்கள் தான். ஒரே நாட்டில், ஒரே ஆட்சியில் தான் வாழுகிறோம். ஏன் ஏற்றத் தாழ்வு? வைதிக வகுப்பினர் 100-க்கு 100 படித்திருக்கிறார்கள்; நாம் தற்குறிகள்—ஏன் இந்த நிலைமை? அவர்கள் வாழ, படிக்க சட்டமும், சாஸ்திரமும் வசதி செய்கிறது. ஆலயங்கள் ஐம்பதினாயிரத்துக்கு மேல் என்று அரசாங்கக் கணக்கு கூறுகிறது. ஆலயத்திலே அவர்கள் தான் இருக்க வேண்டும் என சாஸ்திரமும் சட்டமும் கூறுகிறது. அதனால் ஆலயத்திலே அவர்களுக்கு வேலையும் பணமும் கிடைக்கிறது. எனவே படிக்கிறார்கள்; பாராள நாங்கள் என மார் தட்டுகிறார்கள். ஆனால் நாட்டுக்குடைய நாம் பராரிகளாய் திரிவதா? ஆலயத்திலே யாராகஇருந்தாலும் அர்ச்சகராக இருக்கலாம என்று சட்டம் செய்தால, நம்மில் யாருக்கும் வேலையும் பணமும் கிடைக்குமே. படிக்க முடியுமே. இதை அரசாங்கம செய்ய வேண்டாமா? செய்யுமா?

மனப்போக்கு மாறவேண்டும்

பிராமணர்கள் திறமைசாலிகள் என்பதலல; சமுதாயம் அவர்களுக்குச் சகாயம் செய்கிறது. பறையன் எனப்படுவோர் சமைத்ததை நாடார் சாப்பிடமாட்டான்; நாடார் சமையலை நாய்க்கர் தொடமாட்டார்; நாய்க்கர் சமையலை, பிள்ளையோ, முதலியாரோ தொடுவதில்லை. ஆதித்திராவிடர், நாடார், நாய்க்கர், பிள்ளை, முதலி சமைத்ததை பிராமணன் சாப்பிடமாட்டான். ஆனால், பிராமணர் சமைத்ததை எல்லோரும் சாப்பிடலாம், இது சாஸ்திரம். இந்த நிலை இருக்கிறது ஆதித்திராவிடன் ஹோட்டல் என்று பலகை தொங்கவிட்டால், வியாபாரம் நடக்கவா செய்யும்? நாடார் ஹோட்டல் என்றால் நாடாரும் அவருக்குக்கீழ் உள்ள ஜாதியினர் என்று கருதப்படுகிறவர்கள் தான் வருவார்களே தவிர, மற்றவர்கள் வரமாட்டார்கள். லாபம் எப்படிக் கிடைக்கும்? பிராமணன் ஹோட்டல் என்றால் அனைவரும செல்லலாம். எனவேதான் பிராமணனுக்கு மட்டும்நல்ல இலாபம். இதைக் தடுக்க யார் என்ன முயற்சி எடுத்தார்கள்? பிராமணன் என்று அறிந்து கொள்ள என்னென்ன அடையாளங்கள் உண்டோ அதை அரசாங்கம் ஒழிக்க வேண்டாமா? மக்களின் மனப்போக்கை மாற்ற வேண்டாமா?

நாட்டுப் பிரிவினை

பிரிவினை என்றால் நாட்டை வெட்டி நடுக்கடலில் வைப்பதல்ல. வயலுக்கு வரப்பு இருப்பதைப்போல, வீட்டுக்குக் கதவு இருப்பதைப் போல நம் நாட்டுக்கு ஒரு எல்லையும், அந்த எல்லையை நம் அனுமதி இன்றி எவரும் கடக்க உரிமையும் பெறுவதுதான் பிரிவினை. எனவே அந்த இலட்சியத்திற்குப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்கள் ஆதரவைத்தர வேண்டுகிறேன்"—என்று பேசி முடித்து கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

அடுத்துப்பேசிய தோழர் இரா. துரைராசன் முன்னேற்றக்கழகத்தில் மாணவர் பங்கு பற்றியும், மக்கள் கடமைபற்றியும் விளக்கிவிட்டு, அரசாங்க அடக்குமுறையைக் கண்டித்தும் பேசி கேள்விகள் சிலவற்றிற்கு விடையளித்தார். தலைவர் முடிவுரைக்குப்பின், தோழர் எம். அழகு நன்றி கூறக், கூட்டம் இனிது முடிந்தது.

சந்தா விவரம்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

—மானேஜர்:

விளம்பரம்

ஒருபத்தி ஒருஅங்குலம் ரூ5—0—0 நீண்ட கால ஒப்பந்த விளம்பரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

30—10—49

நாகை :—	இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார்
பொன்னிரை :—	டி. கே. சீனிவாசன்,
மம்சாபுரம் :—	எம். எஸ். ராமசாமி
ஜலகண்டபுரம்:—	மு. கருணாநிதி, ப. கண்ணன்.
தஞ்சை:—	சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத் தம்பி
விருகம்பாக்கம்:—	காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன்

துவக்க விழாப் பொதுக் கூட்டங்கள்

அதிராம்பட்டினம்

அதிராம்பட்டினம், அக். 21—

21-10-49 வெள்ளிக்கிழமையன்று தி. மு. க—அதிராம்பட்டினம் கிளையின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆவலோடு திரண்டு நின்றார்கள். விளம்பர உறுப்பினர் தோழர் எஸ். குஞ்சு அவர்கள் பண் பாடினர்.

ஓ. என். முகமது

தோழர் ஓ. என். முகமது அவர்கள் தலைமை தாங்கி முன்னுரையாகப் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களை எடுத்துக் கூறியும், இந்த நாட்டில் வாழவகையற்ற மக்கள், இலங்கையில படும் இன்னல்களையும், அதே நேரத்தில் வடநாட்டு அகதிகளை ஆதரிக்கும் சர்க்காரின் போக்கையும் கண்டித்துப்பேசினர்.

இரே. இளவரி

அடுத்து பட்டுக்கோட்டைத் தோழர் இரே. இளவரி அவர்கள் பேசுகையில், தி.மு. கழகம் எந்த அழிவு வேலையைச்செய்யவும் துவக்கப்படவில்லை என்றும், எந்தக் கொள்கைக்காகப் பெரியாரைத் தலைவர் என்று ஏற்றுக் கொண்டோமோ அந்தக் கொள்கை வழி நின்று போராடவே தி. மு. கழகக்கொடிக்குக் கீழ அணிவகுக்கிறோம் என்றும், தி. மு. கழகத்தில் பெருவாரியான மக்கள உறுப்பினர்களாகச்சேர்ந்து திராவிட சமதர்மக்குடியரசை ஸ்தாபிக்க வழிகோல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

என். எஸ். இளங்கோ

அடுத்துத் தோழர் என்.எஸ் இளங்கோ அவர்கள் பேசினர்:— "பெரியாரின் பிடிவாதப்போக்கு கண்டு, திராவிடர் கழகக், கோட்டையை விட்டு வெளியேறியுள்ளோம். நாங்கள் விட்டு வெளியேறிய கோட்டையை நாங்கள் தாக்க விரும்பவில்லை. காரணம் அந்தக் கோட்டையின் செங்கற்கள் எங்களால் அடுக்கப்பட்டவை. அதிலே செறிந்திருக்கும் சுண்ணாம்பு எங்களால் பதம் பார்த்துச்சேர்க்கப்பட்டது. நாங்களே கட்டிய கோட்டையை நாங்களே தாக்க முடியுமா? எங்களிடத்திலே வலிமையில்லை என்பதல்ல காரணம், எங்களுக்கு அப்படி செய்யமனமில்லை! வேறு கோட்டையைக் கட்டிக் கொள்ளும் திறமையும், நாட்டிற்கு நலம் பயக்கும் பண்பும் நமக்கிருப்பதால் தான் வேறு கோட்டை — வலிவுள்ள கோட்டை — பழுதற்றப் புதுக் கோட்டையை நம்மால் உருவாக்க முடிந்தது. நமது பீரங்கிகள் பாசிசத்தை நோக்கியும் பழமையை நோக்கியும் திருப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. திராவிடர் கழகம் உள் கோட்டையாகவும், திராவிட முன்னேற்றக்கழகம் புறக் கோட்டையாகவும இருந்து நாட்டைக்காக்கும் பணியை மேற்கொள்ளலாம். அந்த நல்ல எண்ணங்கொண்டே திராவிட முன்னேற்றக்கழகம் என்ற புறக்கோட்டையை அமைத்தோம்.

முன்பு சிவப்பு வட்டக்கொடி ஏந்தி போரிட்டோம். இப்பொழுது சிகப்பு வட்டக்கொடி ஏந்தி போரிடுகிறோம். சர்வாதிகார வட்டத்திற்குள்ளேயே சுழலாமல், ஜனநாயக நீட்டத்திற்கு முன்னேற நாம் முனைந்திருக்கிறோம். எங்கள் முயற்சிவெற்றி பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை."

பின்னர், விளம்பர உறுப்பினர் தோழர் எஸ். குஞ்சு நன்றிகூறக் கூட்டம் இனிதுமுடிந்தது.

சிதம்பரம்

சிதம்பரம், அக். 23—

துவக்கவிழாவுக்கு விளம்பரமாயிருந்தபடியே 22-10-49 மாலை 6-மணிக்கு, ஞானப்பிரகாசம் மேல் கரையில், சினிமா திடலில் அலங்கரிக்கப்பட்ட பந்தலின்கீழ், தோழர் பாலகுரு அவர்கள் தலைமையில் குடந்தை தோழர் எஸ். கே. சாமி அவர்கள் புதிய கழகங்கள் ஏன் ஏற்பட்டன என்ற காரணத்தைச் சிறிது கூறி, இயக்கத்தில் நெடுநாள் தொண்டனாகியதான் இந்த நகரிலும் பலதரம் அற்புதப்பட்டவனுப்பக்கத்துத்தெருவிலேயே மாதக்கணக்கில் வசித்திருக்கிறேன் என்றும், உண்மைத் தொண்டாற்ற சர்வாதிகாரப் போக்கிலிருந்து விலகியதே முன்னேற்றமாகும் என்றும், மக்கட்குள்ள நலிகளைப் போக்க அவசியமான பல திட்டங்களை வகுத்து நடத்துவது உறுதி என்றும் பேசினர்.

அடுத்தபடிதோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், முன்னேற்றக் கழகம் தோன்றியதன் காரணம் செய்தித்தாள்களில் கண்டிருப்பீர்கள். இந்த நாட்டில் பொதுமக்கள் அரசாங்கம் என்பது ஏழை மக்களுக்குப் போதிய நன்மை—சலுகை கொடுக்க முயலாமல், வடநாட்டாருக்கும், பணக்காரர்களுக்கும் சலுகை தந்து வரும் முறையை வாக்காளர்களாகிய பொதுமக்கள் உணரவேண்டும் அதற்கான வழிகளை காங்கிரஸ் இளைஞர்கள் தேடிக்கொண்டு வர வேண்டும். பல புது வரிகளும், அடக்குமுறைகளும் நடத்துவதால் பயனொன்றும் ஏற்பட்டுவிடாது என்று எச்சரித்துப் பேசினர்கள். அடுத்து மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் சீர்திருத்தம் பற்றி சிந்திக்குமாறு சிறிது நேரம் பேசியபின். நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

ஏரல்

ஏரல், அக். 24—

நெல்லை மாவட்டம் ஏரலில் 23-10-49-ல் மாலை 4-30 மணிக்குத் திருச்செந்தூர் ரோடு. 19-ம் நெண் மாடியில் தி. மு. க. திறப்பு விழா, தோழர் வெ. ஆள்வார் தலைமையில் நடைபெற்றது. தி. மு. க. கொடியைத் தோழர் பி. எஸ். கே. தங்கம் ஏற்றிவைத்துக் கொடியின் விளக்கத்தைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். தி மு. கழகத்தைத்தோழர் எம். எஸ். மணி திறந்துவைத்துக் கழகக் கொள்கையை விளக்கியும், பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்தும் சொற்பொழிவு ஆற்றினர். தோழர், சி. என். அண்ணா படத்தை, பி.எஸ்.கே. தங்கம் திறந்துவைத்தார் தோழர் ஆ சிவராமன, நெடுஞ்செழியன் படத்தை திறந்து வைத்தார். தலைவர் முடிவுரையுடன் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது. (வி-உ)

ஆரணி

ஆரணி, அக் 24—

22—10—49 சனிக்கிழமையன்று காலை ஆரணி நகர் தி. மு. கழக துவக்கவிழாவின் அறிகுறியாக, நகரத்தில் முக்கியமான 10 இடங்களில் தி. மு. கழக கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன.

அன்று மாலை குயப்பாளையம் தர்மராஜா கோவில் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் ஆர். குட்டி தலைமையின்கீழ்த் துவக்கவிழாக் கூட்டம். மிகச் சிறப்பாக நடைபெற்றது கூட்ட ஆரம்பத்தில் இயக்கத் தோழர்களால் இன்னிசைப் பண் பாடப்பட்டது. சந்தவாசல் தோழர் நடேசன், டி. டி. அரசு பேசியபின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழகத்தின் கொள்கைகள், கழகம் காண வேண்டியதின் அவசியத்தைப் பற்றி நீண்ட சொற்பொழிவாற்றி, தர்மராஜா கோவில் திடலில் கொடி ஏற்று விழா நடத்தினர். பு. க. இராமகிருட்டினனால் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

அரண்மனைசிறுவயல்

அரண்மனைசிறுவயல், அக்.24—

23-10-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு போஸ் சதுக்கத்தில். இவ்வூர் தி. மு. க. தொடக்க விழா தோழர் காவேரிமணியன் அவர்கள் தலைமையில் துவங்கியது. தோழர் அணவேலாயுதம் அவர்களால் திராவிடப்பண் பாடப்பெற்றபின் தலைவர் முன்னுரை ஆற்றினர்.

பின்னர் தோழர்கள் செல்லச்சாமி, அண இராமநாதன், எஸ். எம். அன்பழகன் ஆகியோர். தி. மு. க. தோற்றம் குறித்தும், அது நாட்டுக்குச் செய்ய இருக்கும் நற்பணிகளையும் எடுத்துப் பேசினர்.

பின் தலைவர் பின்னுரை நிகழ்த்தினர். செயலாளர் நன்றிகூறக் கூட்டம் "தமிழ் வெல்க" என்ற வாழ்த்தொலியுடன் இனிது முடிந்தது. (வி. உ.)

வத்தலகுண்டு

வத்தலகுண்டு, அக். 25—

23-10-49 வத்தலகுண்டு தி. மு. கழகத்தின் ஆரம்பவிழாப் பொதுக்கூட்டம்மாலை 7 மணிக்கு ரேடியோ மைதானத்தில், நிலக்கோட்டைத் தோழர் இ. காத்தான் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. மதுரை தோழர் அய்யாச்சாமி அவர்கள் கழகக் கொடிபற்றி விளக்கம் கூறிக் கொடியேற்றினர். பிறகு மதுரை மாவட்ட தி. மு கழக அமைப்புக்குழு உறுப்பினர் மதுரை முத்து "ராம ராஜ்யத்தில்" போலீஸ் தர்பார்பற்றியும், பெரியாரின் பொருந்தாத் திருமணம் பற்றியும் விளக்கிப் பேசினர். பிறகு நிலக்கோட்டைத் தோழர் சையது இபுராகீம் அவர்கள் தி. மு கழகத்தின் அவசியம்பற்றிப் பேசினர். பின்னர் திருச்சி தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தி. மு. கழகத்தின் இலட்சியம், காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறை ஆகியவை பற்றி விரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றிகூறக்கூட்டம் இனிது முடிந்தது. மழை பெய்தும் மக்கள் ஆர்வத்துடன் திரளாக கூடியிருந்தனர். அன்று இரவு மதுரைமுத்து அவர்கள் கழக அலுவலகத்தில் செயற்குழு உறுப்பினர்களிடம், தி.மு கழக அமைப்புபற்றி விரிவாகக் கூறியும், அங்கத்தினர் சேர்க்கும் முறை, அவசியம்பற்றியும் கூறி ரசீது புத்தகங்களைக் கொடுத்து மதுரைக்குச் சென்றார். (வி-உ)

தலைவரையே கண்டிக்கும் எங்களுக்கு நேரு எம்மாத்திரம்?

மன்னார்குடியில் சம்பத்

மன்னார்குடி, அக். 25—

21—10—49 ல் மன்னார்குடியிலே திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா தோழர் கோவை இளஞ்சேரன் அவர்கள் தலைமையில், செம்மையுற நடைபெற்றது. ராமாமிர்தத்தம்மையார் வாழ்த்தொலி கூற. தோழர் எஸ். கே. சாமி கொடியேற்றுவிழா நடத்த, பின்னர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் வீரமுழக்கமும், தோழர் சாமி அவர்கள் பேசுகையில், காங்கிரஸ் தோழர் ஒருவர் நேருவைப்பற்றி பேசாதே என்று கூறி குழப்பம் ஏற்படுத்தியதற்கு பதிலிறுக்கின்ற முறையிலே சம்பத் அளித்த பதில் மக்கள் அனைவரின் உள்ளத்தையும் உருக்கி விட்டதென்றே கூறவேண்டும். அந்த வார்த்தை. ஆம்—அந்த ஒரு சொல்—எங்களை மனிதனாக்கிய தலைவன், எங்கள் ஏக தலைவன், ஒரு சிறு தவறு செய்து விட்டார் என்பதற்காகத் தண்டை உதறிப் போட்டுக்கொண்டு வெளியேறிய நாங்கள்—யார் குற்றம் செய்தாலும் கண்டிக்கும் பண்புடைத்த நாங்கள்—நேரு பற்றி மட்டும் ஏன் கண்டிக்க தயங்க வேண்டும்? இந்தப் பதில் மக்களை உணர்ச்சிபெறச்செய்தது என்றுதான் கூறவேண்டும். பின்னர் நம் நாட்டு நிலை, எதிர்கால திட்டம்பற்றி விளக்கமாக பேசினர். எங்கும் திராவிட முன்னேற்ற கழகம் என்பதே பேச்சு, ஒரு மகிழ்ச்சி கலந்த மனத்தெளிவு இவைகளினூடே வெளியேறினர் மக்கள் குழாம். (உ-வி)

செருடந்தானி

செருடந்தானி, அக். 23—

நேற்று மாலை சுமார் 6 மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்டம் திருப்பூர் தோழர் ஜானகிராமன் தலைமையில் நடைபெற்றது. அது போது கழகத் துவக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், விவசாயிகளின் நிலைமையைப் பற்றியும் சுமார் 1-30 மணி நேரம் தோழர் கோபி ராஜு அவர்கள் விளக்கிப் பேசினர்கள். அடுத்தபடியாக ஈரோடு தோழர் அப்பாவு அவர்கள் நெசவுத் தொழிலாளர் நிலைமையைப் பற்றியும், சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்புவது பற்றியும், பள்ளி ஆசிரியர்களின் வறுமை நிலைமையைப் பற்றியும் நன்றாக விளக்கினர். இறுதியாகத் தோழர் செருடந்தானி எஸ். மாரிமுத்து அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. உள்ளூர் விவசாயத் தொழிலாளர் பெருமக்களும், நெசவுத் தொழிலாளத் தோழர்களும், தாய்மார்களும், சுற்றுப்புற கிராமங்களிலுள்ள பொதுமக்களும் மழை பெய்துகொண்டிருந்தும் ஏராளமாக வந்திருந்தனர்.

விவேகாநந்த போதம் !

"கீழ்த் திசை என்றும், மேல் திசை என்றும், ஆசியா வென்றும் ஐரோப்பா வென்றும் பேசுகிறோம். இந்நாளில் இதற்கு அர்த்தம் உண்டா? பார்க்கப்போனால் கிழக்கு என்று நீங்கள் கூறுவது பூகோள அமைப்புபடி உங்களுக்கு மேற்கு ஆகும்."

—பண்டித நேரு

பொழுது போக்கு

தமிழ் — நாடகம்

ஒற்றைவாடை	— உபிரோலியம்

தமிழ்—சினிமா

கபாலி	— கன்னியின் காதலி
பிரபாத்	— அபூர்வ சகோதரர்கள்
வெல்லிங்டன்	— "
கெயிட்டி	— பிரம்ம ரதம்
சயானி	— "
சித்ரா	— மங்கையர்க்கரசி
மகாராணி	— "
சினிமா சென்ட்ரல்	— அசோக்குமார்

தெலுங்கு

லட்சுமி	— மாயக்குதிரை
ஸ்டார்	— "
ஒரைன்	— "
பாரகன்	— லைலா-மஜ்னு
சரஸ்வதி	— ரட்சரேகா

இந்தி

செலக்ட்	— மேலா
பிராட்வே	— பரி பஹான்
சாகர்	— "

ஆங்கிலம்

Casino	— Mighty joe Young
Midland	— The Bribe
Minerva	— Captain from Castile
New Globe	— South of St. Louis
New Elphinstone	— The Snake Pit
Roxy	— Mystery of the Halfway Island

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்கள் தேவை.

1. பொன்னமராவதி
2. பெரம்பலூர்
3. கண்டனூர்
4. மேட்டூர் டாம்
5. மேட்டுப்பாளையம்

(தஞ்சை)

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.